සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved History

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	**வரலாறு**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. காரகல பத்மாவதி பிரிவெனா அமைந்துள்ள இராசதானி,
1. கம்பளை 2. கோட்டே 3. தம்பதெனியா

02. மகாபராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேசத்தில் கட்டியெழுப்பிய புதிய நகரம் எது?
1. பொலன்னறுவை 2. தம்பதெனியா 3. பண்டுவஸ்நுவர

03. மேற்குலக வைத்திய முறையின் தந்தை என போற்றப்படுபவர் யார்?
1. ஹிபோகிரடீஸ் 2. பிளேட்டோ 3. அரிஸ்டோடில்

04. கிரேக்க இனத்தவர் இலங்கையை எவ்வாறு அழைத்தனர்?
1. சைலான் 2. தப்ரபேன் 3. தம்பபண்ணி

05. பண்டைய இலங்கையில் வர்த்தகம் விருத்தியடைந்ததுடன் தோற்றம் பெற்ற வணிக நகரம் யாது?
1. மாகம 2. மன்னார் 3. பொலன்னறுவை

- **6 – 10 வரையான வினாக்களுக்கு அடைப்பினுள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

06. இன்றைய ஒலிம்பிக் விளையாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ..... ஆவார்.

07. யாப்பகுவ மலை உச்சியில் கோட்டையைக் கட்டி அங்கு ஆட்சி செய்த மன்னன் ..... ஆவான்.

08. வெளிநாடுகளிலிருந்து எமது நாட்டுக்கு பொருட்களைக் கொண்டு வருதல் ..... என அழைக்கப்படும்.

09. அநுராதபுர இராச்சியத்தை ஆட்சி செய்த ..... மன்னன் பலவீனமான ஆட்சியாளனாகக் காணப்பட்டான்.

10. உரோம் நகரில் அமைக்கப்பட்டுள்ள ..... திறந்தவெளி விளையாட்டரங்கமாகும்.

(V ஆம் மகிந்தன் / சுப தளபதி / கிரேக்கர் / உரோமர் / கொலோசியம் / சங்க தளபதி / இறக்குமதி)

Past Papers Wiki

- **11 – 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் முன்னால் அடைப்பினுள் இடுக.**

11. 'ஹஸ்எபு' நாணயம் இலங்கையில் ஆரம்ப காலத்தில் பாவணையிலிருந்த நாணயம் ஒன்றாகும். (.....)

12. போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சியாளர் ஆரிய சக்கரவர்த்தி ஆவார். (.....)


13. பிளேட்டோ கிரேக்கத்தில் வாழ்ந்த தத்துவ ஞானியாவார். (.....)

14. IIஆம் புவனேகபாகு மன்னன் குருநாகல் இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான். (.....)

15. நாட்டார் பாடல்கள் எமது கலாசார மரபுரிமைகளில் ஒன்றாகும். (.....)

- **16 – 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களைப் பயன்படுத்தி விடையளிக்க.**

16. இவ்வுருவிலுள்ள நபர் கிரேக்கத்தில் வாழ்ந்த வீரகாவியத்தை எழுதிய எழுத்தாளராவார்? இவர் யார்?



.....

17. இவ்வுருவிலுள்ள பாலம் எந்நாட்டவரால் கட்டப்பட்டது?



.....

18. ஓகஸ்டஸ் சீசரின் ஆட்சிக்காலத்தில் கட்டிய இந் நிர்மாணிப்பின் பெயர் யாது?



.....

19. இக்கட்டடம் எந்த இராச்சியத்திற்குரியது?



.....

20. இச் சமய கட்டடம் எம்மதத்தவர்களுக்குரியது?




.....

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

(01) அ) பின்வரும் உலகப் படத்தினைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




i. a) A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள கடல் யாது?

B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள இத்தாலியில் அமைந்திருக்கும் மலைத்தொடர் யாது?

C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள கிரேக்க இனத்தவர் வர்த்தகத் தொடர்புகளைப் பேணி வந்த நாடு எது?

D எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது உரோமர் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு ஆகும். அந்நாட்டின் பெயர் யாது?

(4 புள்ளிகள்)



b) பின்வரும் இலங்கைப் படத்தில் A, B, C, D எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.


1. புவனேகபாகு ஆதிபாத என்பவரின் கோட்டை A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அது எது?
2. மாகன் ஆக்கிரமிப்புச் செய்த B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள இராசதானி யாது?
3. C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்கை வந்த அரேபிய இனத்தவரான தேசசஞ்சாரி யார்?
4. D எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளர் யார்?

(4 புள்ளிகள்)



ஆ) 1. இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது யாது?
2. இவற்றுக்குச் சொந்தமான நாட்டிலிருந்து வந்து கம்பளை இராசதானியை ஆக்கிரமித்த தளபதி யார்?
3. இலங்கைக்குச் சொந்தமான மாடிகளைக் கொண்ட கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாடு எது?
4. துறைமுகங்களில் கடமை புரிந்த அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

(4 புள்ளிகள்)



இ) 1. இவ்வுருவிலுள்ள ஆட்சியாளர் யார்?
2. இவர் ஆட்சி செய்த பேரரசு எது?
3. இவருடைய ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட திறந்தவெளி விளையாட்டரங்கு யாது?
4. உரோமிலிருந்து கண்ணாடி மணிகளைக் கொண்டு வந்த இலங்கை மன்னன் யார்?

(4 புள்ளிகள்)

(02) i. புராதன இலங்கை மக்களின் வாழ்க்கை முறை இடம் பெற்ற மூன்று துறைகளும் எவை?
(3 புள்ளிகள்)

ii. புராதன கால மக்கள் பசுக்களிலிருந்து பெற்றுக் கொண்ட பஞ்சரப் பொருட்களைக் குறிப்பிடுக.
(5 புள்ளிகள்)

iii. பின்வரும் கைவினைஞர்கள் புராதன காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A - ரன்கருவன்

B - நெசவாளர்

C - மட்பாண்டங்கள் செய்வோர் (3 புள்ளிகள்)

(03) i. மகா விஜயபாகு மன்னன் பற்றிய தகவல்கள் அடங்கிய மூலாதாரங்கள் மூன்று குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

ii. நிஸங்கமல்ல மன்னன் நிர்மாணித்த கட்டடங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையில் நிர்வாகப் பிரிவுகள் வேறுபடுத்தியிருந்த முறையைக் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

(04) i. குருநாகல் இராசதானிக் காலத்தில் எழுதிய இலக்கிய நூல்கள் மூன்று குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

ii. கோட்டே இராசதானிக் காலத்தில் எழுதிய இலக்கிய நூல்கள் நான்கு குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

iii. பின்வரும் இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக.

A - கோட்டே இராசதானி

B - கம்பளை இராசதானி

C - குருநாகல் இராசதானி

D - தம்பதெனிய இராசதானி (4 புள்ளிகள்)

(05) i. நகர அரசுகளுள் காணப்பட்ட துலாம்பரமான பண்புகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கிரேக்க நாகரிகத்தின் மேற்காக ..... கடலுக்கும் ..... ஈஜியன் கடலுக்கும் மத்தியில் ..... கடலினுள் துருத்திக் கொண்டுள்ள குடாநாடும் அதற்குத் தெற்காக ..... தீவு உட்பட ஏனைய தீவுக்கூட்டங்களையும் கொண்டு அமைந்துள்ளது. (4 புள்ளிகள்)

iii. கிரேக்கர்களின் வியாபாரப் பொருட்கள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(06) i. புராதன கிரேக்க மக்களின் அடிப்படைப் பொருளாதார அமைப்பு மூன்று துறைகளில் அமைந்திருந்தது. அம்மூன்று துறைகளையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பின்வரும் நபர்கள் தமது திறமைகளைக் காட்டிய துறைகளைக் குறிப்பிடுக.

A - அரிஸ்டோட்டில்

B - சோக்கிரடீஸ்

C - ஹிபோகிரடீஸ்

D - செபொக்லிஸ் (4 புள்ளிகள்)

iii. கிரேக்க நாகரிகத்தின் மூலம் உலகிற்குக் கிடைக்கப்பெற்ற அருஞ் செல்வங்கள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(07) i. உரோமப் பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. இத்தாலிக்கு அண்மையில் அமைந்துள்ள கடல்கள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. உரோமானியர்களால் ஐரோப்பிய நாகரிகத்திற்கு கிடைத்த பாரம்பரியங்கள் ஐந்து குறிப்பிடுக.
(5 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025 **பாடம்** - வரலாறு (History)

விடைப்பத்திரம் - தரம் - 7

பகுதி – I

1. கோட்டை	6. கிரேக்கத்தில்	11. ✓	16. ஹோமர்
2. பண்டுவஸ்நுவர	7. சுபதளபதி	12. X	17. உரோமானியர்கள்
3. ஹிபோகிரடீஸ்	8. இறக்குமதி	13. ✓	18. பெருங்குளியல் தடாகம் (கெரகொல்லா)
4. தப்ரபேன்	9. 5ஆம் மகிந்தன்	14. ✓	19. கம்பளை
5. மாகம	10. கொலோசியம்	15. ✓	20. இந்து மதத்தவர்களுக்குரியது

பகுதி – II

(01)

அ)

i. A. மத்தியதரைக்கடல் B. அல்ப்ஸ் மலைத்தொடர்
C. சீனா D. ஸ்பானியா

ii. A. கோவிந்த மலை B. பொலன்னறுவை
C. இபுனு பதூதா D. விஜய கூலங்கை

ஆ) i. சீன நாணயம் ii. செங்கோ தளபதி
iii. சீனா iv. சுங்க அதிகாரிகள்

இ) i. ஒகஸ்டர் சீசர் ii. உரோமப் பேரரசு
iii. கொலோசியம் iv. பாதிகாபய மன்னன்

(02) i. விவசாயம், வர்த்தகம், விலங்கு வளர்ப்பு
ii. பால், மோர், வெண்ணெய், நெய், தயிர்
iii. A - சுவர்ணகார
B - பெஹெகார
C - கும்பகார

(03) i. மகாவம்சம், பனாகடுவ செப்பு சாசனம், அம்பகமுவ கல்வெட்டு
ii. அட்டதாகே, ரன்கொத் விகாரை, நிஸ்ஸங்கலதா மண்டபம், வட்டதாகே
iii. உருகுணை, மாயாரட்டை, ராசரட்டை

(04) i. தலதா சிரித, சிங்கள போதிவம்சம், அநாகத வம்சம், பன்சீய பனஸ் ஜாதகய புத்தகம் சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பு
ii. செலலிஹினி சந்தேசய, ஹங்க சந்தேசய, கிரா சந்தேசய, பெரகும்பா சிரித, காவிய சேகர
iii. A - ஆறாம் பராக்கிரமபாகு
B - நான்காம் புவனேகபாகு
C - இரண்டாம் புவனேகபாகு
D - மூன்றாம் விஜயபாகு

(05) i. நிலப்பரப்பு சிறியதாக இருத்தல், சனத்தொகை வரையறைக்குட்பட்டிருந்தமை, பிரஜைகளுக்கு மாத்திரம் அரசியல் உரிமை இருந்தமை.
ii. அயோனியன், கிழக்காக, மத்தியதரை
iii. நறுமணப் பொருட்கள், அலங்கார மட்பாண்டங்களும், லினன் துணி வகைகளும் வைன் பானம்

(06) i. விவசாயம், விலங்கு வளர்ப்பு, வர்த்தகம்
ii. A - தத்துவஞானி
B - தத்துவஞானி
C - வைத்திய முறையின் தந்தை
D - நாடக கலைஞர்
iii. ஐரோப்பிய சிந்தனைகள், ஜனநாயக ஆட்சிமுறை, ஒலிம்பிக் விளையாட்டு, கலைஞர்

(07) i. ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ்
ii. மத்திய தரைக்கடல், அட்றியாட்டிக் கடல், அப்பினைன் மலைத்தொடர், அல்ப்ஸ் மலைத்தொடர்
iii. கிறிஸ்தவ சமயம், இலத்தீன் மொழி, உரோமானிய சட்டம், கட்டட நிர்மாணக்கலை

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank